DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.13**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பொன் இருளன் |
| Father Name | : | மாயாண்டி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2025.

(2வது எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது பழங்காநத்தத்தில் குடியிருக்கிறேன். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் 7வது எதிரி பாண்டியை தெரியும். மற்ற ஆஜர் எதிரிகளான 2 மற்றும் 3 எதிரிகளை எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது நான் அழகிரி அவர்கள் வீட்டில் வீடு மற்றும் தோட்டங்களை சுமார் 20 வருடங்களுக்கு மேலாக பராமரித்து

வருகிறேன் என்றும், போன தி.முக ஆட்சியில் மதுரை மாநகர், 67 வது வார்டு (தற்போது 75 வது வார்டு) கவுன்சிலராக இருந்தேன் என்றும், எனக்கு அட்டாக் பாண்டியை சுமார் 15 வருடமாக கட்சியில் தொண்டரணியில் இருந்த போது ஆரோக்கிய பிரபு, விஜயபாண்டி ஆகியோரை தெரியும் என்றும், ஆரோக்கிய பிரபு சகாய பிரவீனை எனக்கு தெரியாது என்றும், ராதாகிருஷ்ணனை எனக்கு 10 வருடமாக தெரியும் என்றும், அழகிரி மகன் துரை நண்பர் என்றும், அந்நேரத்தில் ராமகிருஷ்ணனுக்கும் ஆரோக்கிய பிரபுவுக்கும் பழக்கம் இருக்கான்னு எனக்கு தெரியாது என்றும், பொட்டு சுரேஷ் அழகிரி வீட்டிற்கு வருவதை வைத்து எனக்கு பழக்கம் என்றும், அட்டாக் பாண்டி அண்ணன் வீட்டிற்கு வருவார் என்றும், அப்போது அவர் வேளாண்மை குழு தலைவராக இருந்த போது நான் அவரை பார்த்தது, அதற்கு பிறகு நான் அவரை பார்த்தது கிடையாது என்றும், பொட்டு சுரேஷ் கொலை வழக்கில் அவர் ஜெயிலுக்கு போன பிறகு தினகரன் கேஸ் டிரையல் வருவது சம்பந்தமாக அதற்காக பணத்திற்கு ஏற்பாடு பண்ணுங்கன்னு என்னை பார்க்க வந்த ஆரோக்கிய பிரபு சொன்னார் என்றும், ஆரோக்கிய பிரபு ராமகிருஷ்ணன் சார் கிட்டையும் இது விஷயமாக சொல்லியிருக்கிறேன் என்று சொன்னார் என்றும், அப்போது நான் ராமகிருஷ்ணனை பார்க்கவே இல்லை என்று சொன்னேன் என்றும், அதற்கு கேட்டு சொல்லுங்கன்னு அவர்கள் போய்விட்டார்கள் என்றும், பிறகு மறுபடியும் அந்த வருடத்தின் நவம்பர் மாதம் 2 ம் தேதி என்னிடம் போன் செய்து, நாங்கள் கேட்ட விவரத்தை பற்றி அண்ணனிடம் சொல்லிட்டீங்களா என்று கேட்டார் என்றும், அப்போது நான் கேட்கவில்லை என்று சொன்னேன் என்றும், அதற்கு நான் Free ஆன பிறகு கேட்டு சொல்கிறேன் என்று சொன்னேன் என்றும்,

அதற்கு பிறகு அவர்கள் எனக்கு போன் எதுவும் செய்யவில்லை என்றும், ஆரோக்கிய பிரபு என்னை பார்த்த விஷயத்தை நான் அண்ணனிடமோ, துரை தயாநிதி மற்றும் ராமகிருஷ்ணனிடமோ யாரிடமும் சொல்லவில்லை என்றும், ராமகிருஷ்ணன் பணம் வாங்கிக்கொடுக்காத காரணத்தினால் ஆரோக்கிய பிரபு, பிரவீன் ஆகியோர்கள் அட்டாக் பாண்டி சொல்லி ராமகிருஷ்ணனை தாக்கியிருக்கலாம்ன்னு தோணுது என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.